## சங்க இலக்கியத்திலுள்ள ‘தகைசால்’ என்ற சொல்லுக்கு மிகவும் பொருத்தமானவர்!

# மனித நேயத்தின் மகத்தான தலைவர்!

## ‘தகைசால் தமிழர்’ விருதுபெற்ற பேராசிரியர் காதர் மொகிதீனுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் – கழகத்தின் சார்பில் அமைச்சர் எ.வ. வேலு பங்கேற்று வாழ்த்துரை!



**சென்னை, ஆக. 17-**

**சுதந்திர தின விழாவில் ‘தகைசால் தமிழர்’ விருதுபெற்ற இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் தி.மு.கழகத்தின் சார்பில் பங்கேற்று அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் பேசும்போது ‘மனித நேயத்தின் மகத்தான தலைவர்’ என்று புகழாரம் சூட்டினார்.**

சென்னையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நமது தாய்நாட்டின் 79வது சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டா லின் அவர்களால் சமுதாய தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களுக்கு தகைசால் தமிழர் விருது வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (15.08.2025) மாலை சென்னை எழும்பூர் பைஸ் மஹாலில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சார்பில் பாராட்டு விழா மற்றும் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா நடைபெற்றது.

தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை தலைவர் மௌலானா மௌலவி காஜா முயீனுத்தீன் பாகவி ஹஜ்ரத் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய உயர்நிலை அரசியல் ஆலோசனை குழு தலைவர் செய்யது சாதிக் அலி தங்ஙள், தேசிய பொதுச் செயலாளர் குஞ்ஞாலிக்குட்டி , தேசிய பொருளாளர் பி.வி. அப்துல் வஹாப் , இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் , நீதியரசர் அக்பர் அலி மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய, மாநில நிர்வாகிகள் காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப் பெருந்தகை , மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, திராவிடர் கழக பொதுச் செயலாளர் பூங்குன்றன், மமக தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, விடுதலை சிறுத்தைகள் கட்சி துணை பொதுச் செயலாளர் ஆளூர் ஷாநவாஸ் , மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சி ரங்கராஜன் , தமிழ்நாடு அரசு சிறுபான்மை ஆணைய துணை தலைவர் இறையன்பன் குத்தூஸ் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் தி.மு.கழகத்தின் சார்பில் பங்கேற்று பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பேசியதாவது :

என் நெஞ்சமெல்லாம் என்றும் நிறைந்திருக்கும் பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரியவரும், தமிழ்நாடு அரசால் இன்று முதல் தகைசால் தமிழர் என்ற அடைமொழியுடன் அழைக்கப்படுபவருமான பேராசிரியர் பெருந்தகை அவர்களைப் பாராட்டும் வகையில் இந்த இனிய நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இங்கே வந்திருக்கும் அனைவருக்கும் நமது திராவிட மாடல் நல்லாட்சியின் முதல்வர் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து, அனைவரையும் வாழ்த்தி வரவேற்கிறேன்.

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்**

என வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருக்கிறார். இந்தக் குறளின் வழியில் தன் வாழ்க்கையை முழுமையாக நடத்திக் கொண்டிருக்கக் கூடிய இந்தப் பேராசிரியர் பெருமகனாருக்குதான் இந்தக் குறல் மிகவும் பொருந்தும். எனக்குத் தெரிந்து இந்தியாவில் இரண்டு பேராசிரியர்கள் . ஒன்று எமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகத் திகழ்ந்த எங்கள் பேராசிரியர் அன்பழகன் . மற்றொரு பேராசிரியர் இந்தியா முழுவதும் நல்லிணக்க நாயகராக அடையாளப்படுத்தப்பட்டு, எல்லோரின் நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்து வாழும் பெருமதிப்பிற்குரிய இந்தப் பேராசிரியர் தான்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திய யூனியன் முஸ்லிம் லீகுக்கும் உள்ள உறவு நீண்ட கால அளவைக் கொண்டது. இந்த மேடைக்கு வந்து பேராசிரியர் பெருந்தகை அவர்களை வாழ்த்த வேண்டும் என்பதற்காக நேற்று நான் சங்க இலக்கிய நூல்கள் சிலவற்றைப் புரட்டிப் பார்த்தேன். அதில், ‘இனியவை நாற்பது’ என்ற நூலில் ‘தகை’ என்ற சொல்லுக்கு பொருள் என்ன என்று சொல்லதிகாரம் என்ற பகுதியைப் பார்த்தபோது அன்பு, அருள், குணம், கவசம், பெருமை என்றெல்லாம் அதில் பொருள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ‘நான்மணிக் கடிகை’ எனும் நூலில், ‘தகைசால்’ என்ற சொல்லுக்கு பண்பில் சிறந்தவர் என்ற பொருள் தரப்பட்டிருக்கிறது. ஆக, சங்க இலக்கிய நூல்கள் அனைத்தையும் புரட்டிப் பார்க்கிறபோது, ‘தகைசால்’ என்ற சொல்லுக்குத் தரும் பொருட்கள் அனைத்தும் இந்தப் பேராசிரியருக்கு முற்றிலுமாகப் பொருந்திப் போகிறது.

அதன் காரணமாக, 8 கோடி தமிழர்களின் இதய வேந்தராகவும், ஒட்டுமொத்த கழகத்தின் உதயசூரியனாகவும் திகழும் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர், தமிழ்நாட்டின் முதலமைச்சர் இந்தப் பேராசிரியரை திரும்பத் திரும்ப பலமுறை பார்த்து, நன்கு அறிந்திருந்த நிலையில்தான் ‘தகைசால் தமிழர்’ எனும் இந்த மிகப்பெரிய விருதை இன்று காலையில் நம் பேராசிரியருக்கு வழங்கி கண்ணியப்படுத்தி இருக்கிறார்.

இந்த திராவிட மாடல் ஆட்சி வந்த பிறகுதான் தகைசால் தமிழர் எனும் இந்த விருதே கொடுக்கப்பட்டு வருகிறது. 2021 இல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் துவக்கமாக பொதுவுடமை இயக்கத்தைச் சார்ந்த சங்கரய்யா அவர்களுக்கும், 2022ஆம் ஆண்டில் அதே பொதுவுடமை இயக்கத்தைச் சார்ந்த பெரியவர் நல்லகண்ணு அவர்களுக்கும், 2023இல் அன்பிற்குரிய அண்ணன் ஆசிரியர் கி. வீரமணி ஐயா அவர்களுக்கும், 2024ஆம் ஆண்டில் இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்டவரும், கர்மவீரர் காமராஜர் அவர்களுக்கு பெருந்துணையாகத் திகழ்ந்தவருமான குமரி அனந்தன் அவர்களுக்கும் வழங்கப்பட்ட நிலையில், 2025ஆம் ஆண்டில் இன்று இந்தப் பேராசிரியருக்கு தகைசால் தமிழர் விருது தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டிருக்கிறது.

**கலைஞர் விரும்பியதற்கு என்ன காரணம்!**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பவர் தமிழர்கள் அனைவரின் அடையாளம். ஆக, முதலமைச்சர் விருது கொடுக்கின்றார் என்றால் ஒட்டுமொத்த தமிழர்களும் கொடுக்கின்றார்கள் என்றே அதற்கு பொருள். அப்படியானால் தமிழர்கள் அனைவரும் இந்தப் பேராசிரியரை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இதைவிட வேறு என்ன பெருமை இருக்கப் போகிறது?

இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தலைவராக பலர் இருந்திருக்கிறார்கள். இந்திய விடுதலைக்குப் பிறகு 1948ஆம் ஆண்டில் அகில இந்திய முஸ்லிம் லீகின் தலைவராகவும், அதன் தமிழ்நாடு மாநில தலைவராகவும் திகழ்ந்தவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் . அவருக்குப் பிறகு வந்த தலைவர்களில் யாரும் இந்த இரண்டு பொறுப்புகளையும் சேர்த்து வகித்திடவில்லை. ஆக, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களையடுத்து நமது பேராசிரியர்தான் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தேசிய தலைவர், தமிழ்நாடு மாநில தலைவர் என்ற இரண்டு பொறுப்பையும் சுமந்து கொண்டிருக்கிறார்.

தனது மிகக் குறைந்த வயதில் இளமைப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபடத் தொடங்கிய அவர், இன்று இவ்வளவு பெரிய வரலாற்றுப் பேரியக்கத்தின் தேசிய தலைவராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார் என்றால், அதற்கு அவரது அறநெறி, அருங்குணம் ஆகிய நற்பண்புகள்தான் காரணம் என்று சொன்னால் அது மிகையாகாது. கலைஞர் அவர்களுக்கு இவரை மிகவும் பிடிக்கும். ‘சமூக நல்லிணக்கத்தின் தூதுவர்’ என்று ஒருவரை அடையாளப்படுத்த வேண்டும் என்றால் அதற்கு மிகப் பொருத்தமானவராக இந்தப் பேராசிரியர்தான் திகழ்ந்து கொண்டிருக்கிறார். கலைஞர் இவரை மிகவும் விரும்பியதற்கும் அதுதான் காரணம்.

**கலைஞருடன் 26 ஆண்டுகள் இரண்டறக் கலந்து பயணித்தவன் நான்!**

கலைஞர் அவர்களோடு ஏறத்தாழ 26 ஆண்டுகாலம் இரண்டறக் கலந்து பயணித்தவன் நான். இந்தப் பேராசிரியரை கலைஞர் அந்த அளவுக்கு நம்பினார் என்பதை நேரில் அறிந்து உணர்ந்திருக்கிறேன். முஸ்லிம்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்று கோரிக்கையை பல காலங்களிலும், பலரும் முன்வைத்து வந்திருக்கின்றார்கள்தான். இங்கே வந்திருக்கும் அருமை நண்பர் பேராசிரியர் ஜவாஹிருல்லாஹ் கூட தமிழ்நாடு சட்டமன்றத்தில் பலமுறை அதைக் கேள்வியாக எழுப்பி இருக்கிறார்.

ஆனால் ஒருமுறை கோபாலபுரத்தில் அண்ணன் கலைஞர் அவர்களுடன் நான் இருந்த வேளையில், பேராசிரியர் அங்கே வந்து, கலைஞர் அவர்களைச் சந்தித்து, ஒரு கடிதத்தைக் கொடுத்தார். “முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் வணிகத்தில்தான் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்... அந்த வணிகம் சிறியதாகவோ, பெரியதாகவோ, தொழிற்சாலையாகவோ அல்லது மண்டியாகவோ இருக்கும். மொத்தத்தில் தொழிலில் ஈடுபவர்கள்தான் முஸ்லிம் மக்கள்/ அப்படிப்பட்ட அம்மக்கள் அரசுப் பணிகளில் நுழைவதற்கு வாய்ப்புகள் மிகக் குறைவாகவே இருக்கிறது... அரசுப் பணிகளில் செல்வதற்கு இட ஒதுக்கீடு தந்தால்தான் வாய்ப்புகள் விசாலமாக இருக்கும். அதற்கான ஏற்பாடுகளைத் தாங்கள் செய்ய வேண்டும்” என்று கலைஞர் அவர்களிடம் பேராசிரியர் வலியுறுத்தி வேண்டிக்கொள்ள, அதைக் கருத்திற் கொண்ட கலைஞர் அவர்களும் 3.5 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்கினார். ஆக முஸ்லிம்களுக்கு இந்த இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருப்பதில் பலரது பங்களிப்புகள் இருந்தாலும் கூட, பேராசிரியர் அவர்களின் பங்களிப்பு மகத்தானதும், வலிமையானதும் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடமில்லை.

இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தின் ஒருங்கிணைப்பாளராகவும், ‘மணிச்சுடர்’ நாளிதழின் ஆசிரியராகவும், வெளிநாடு வாழ் முஸ்லிம் பெருமக்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக ‘காயிதே மில்லத்’ பேரவை எனும் சங்கிலித் தொடரான அமைப்பை நிறுவியவராகவும் இந்தப் பேராசிரியர் திகழ்ந்து கொண்டிருக்கிறார். இனிய சொற்பொழிவாளர். வாழும் நெறி, குர்ஆனின் குரல், இஸ்லாமிய இறைக் கோட்பாடு என பல நூல்களை எழுதிய அற்புதமான ஓர் எழுத்தாளர். தாருல் குர்ஆன் எனும் இதழில், “தமிழருக்கு இஸ்லாம் வந்த மதமா சொந்த மதமா” எனும் தலைப்பில் ஒரு மிகப்பெரிய அற்புதமான தொடர் கட்டுரையை இவர் எழுதியிருக்கிறார்.

**செம்மொழி மாநாட்டில் வரவேற்கும் நல்வாய்ப்பு!**

கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டின் வரவேற்புக் குழு தலைவராக கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்டு நான் பணியாற்றினேன். அப்பொழுது நான் உணவுத் துறை அமைச்சரும் கூட. வரவேற்பு குழு தலைவர் என்ற அந்தப் பொறுப்பை வைத்துக் கொண்டு, இந்தப் பேராசிரியரை வரவேற்கும் நல்ல வாய்ப்பும் எனக்குதான் கிடைத்தது. அந்த மாநாட்டில் பல்வேறு அரங்கங்கள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழுக்கும் அரபி மொழிக்கும் உள்ள ஒப்பாய்வு எனும் தலைப்பில் ஒரு மிகப் பெரிய ஆய்வைச் செய்து, அதைக் கட்டுரையாகச் சமர்ப்பித்து இவர் அந்த மாநாட்டில் ஆற்றிய உரை இன்றைக்கும் என் காதுகளில் ரீங்கரித்துக் கொண்டே இருக்கிறது.

எனக்கும் இந்தப் பேராசிரியருக்கும் வயதில் வேறுபாடு உண்டு. என்னை விட அவர் அதிக ஆண்டுகள் மூத்தவர். என்றாலும் இங்கே பேசிய பொதுச்செயலாளர் அபூபக்கர், எனக்கும் இந்தப் பேராசிரியருக்கும் ஓர் உறவு உண்டு என்று கூறினார். அரசியல் வாழ்விற்கு வந்து விட்டால் என்றைக்கும் வயதை ஒரு பொருட்டாகவே கருத முடியாது. எனவே, இவருக்கும் எனக்கும்ஓர்உறவுஉண்டு. அந்தஉறவைஅண்ணன் தம்பி என்று கூட எடுத்துக் கொள்ளலாம்.

**பேராசிரியர் குறித்து கலைஞர் சொன்ன கருத்து!**

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் அப்துல் பாசித், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி ஆகியோரெல்லாம் எனக்கு மச்சான்கள்; நான் அவர்களுக்கு மாமன். ஆக இந்த மாமன் மச்சான் உறவு முஸ்லிம்களுக்கும், இந்துவாகப் பிறந்த என்னைப் போன்றவர்களுக்கும் மிக நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது என்றாலும், இந்தப் பேராசிரியருடன் எனக்குள்ள உறவு அண்ணன் தம்பி உறவுதான். அந்த உறவு எப்படி என்று நான் விளக்குகிறேன்.

பல தேர்தல்களைக் கண்டவர் அவர். ஒரு தேர்தலின்போது எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கு வந்தார். அங்கு இவர் வேட்பாளர். அப்பொழுதுதான் எனக்கும், இவருக்கும் இடையிலான உறவும் மிகவும் நெருக்கமானது. அந்தத் தருணத்தில் கலைஞர் என்னை அழைக்க, அதிகாலையிலேயே அவரிடம் சென்றேன். “பேராசிரியர் தேர்தலில் போட்டியிடுகிறார். அவருக்கு அவர் கள்ளம் கபடம் இல்லாதவர், சூதுவாது தெரியாதவர், அப்பாவி என்ற சொல்லுக்கு மொத்த உருவம் யார் என்றால் இந்தப் பேராசிரியர்தான்” என்று கலைஞரே என்னிடம் சொன்னார்.

**கலைஞர் உத்தரவு!**

“இவர் அப்பாவி. அரசியலில் உள்ள நெளிவு சுழிவுகளை, ஏற்ற இறக்கங்களைத் தெரியாதவர். மிகவும் வெகுளியானவர். அப்படிப்பட்ட அவரை நாடாளுமன்றத் தேர்தலில் வேலூர் தொகுதியில் போட்டியிட நிறுத்தி இருக்கிறேன். அந்தத் தொகுதிக்குள்தான் உனது ஆரணி சட்டமன்றத் தொகுதியும் வருகிறது. எனவே அவருக்கு எந்தவித அன்புத் தொல்லையும் கொடுக்காமல் அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டியது உனது கடமை” என்று கலைஞர் எனக்கு ஆணையிட்டார்.

அந்தத் தருணத்தில் நான் சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தேன். எம்எல்ஏ என்றால் எவ்வளவு கெத்தாக இருப்பார்கள் என்று உங்களுக்குத் தெரியும். அப்படியான நிலையிலும் நான்தான் அவரை அவரது இருப்பிடத்திற்குத் தேடிச் சென்று, நேரில் சந்தித்து, சால்வை அணிவித்து கண்ணியப்படுத்தி, அவர் தந்த தேநீரையும் அருந்திவிட்டு, “தங்களை இந்தத் தேர்தலில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கலைஞர் எனக்கு உத்தரவிட்டிருக்கிறார். உங்களுக்கு ஒரு ஜீப் வாகனத்தை ஏற்பாடு செய்கிறேன். இரண்டே நாட்கள் மட்டும் ஆரணி தொகுதிக்குள் வந்து, வெறுமனே கையசைத்து விட்டு மட்டும் சென்று விடுங்கள். இதைத் தாண்டி இந்தத் தேர்தலில் வேறு எந்த அன்புத் தொல்லையையும் உங்களுக்கு நான் தரமாட்டேன்” என்று அப்பொழுது அவரிடம் நான் கூறினேன்.

**பேராசிரியருக்கும் எனக்கும் அண்ணன் தம்பி உறவு!**

முதலில் இரண்டு நாள் என்று கூறியிருந்தாலும் பிறகு அந்த நிரலை ஒன்றரை நாள் என்று மாற்றி விட்டேன். பேராசிரியர் அவர்களும் நான் சொன்னது போலவே வந்து, மக்களைப் பார்த்து கையசைத்து விட்டு சென்று விட்டார். அதன் பிறகு ஆரணி சட்டமன்றத் தொகுதியில் உள்ள வாக்குகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் இவர் வெற்றி பெற பெருமுயற்சியை நாங்கள் மேற்கொண்டோம். அந்தக் காலகட்டத்தில் எங்களுக்கிடையில் ஏற்பட்ட நெருக்கம்தான் இந்த அண்ணன் தம்பி உறவு.

அன்று முதல் இன்று வரை என்னையும் அவரையும் பிரிக்கவே முடியவில்லை. இப்படியும் ஒரு எம்எல்ஏ இருக்கிறானா என்று பலரும் வியந்து கூறிய அந்தக் காலகட்டத்தில், நான் இல்லாத ஒரு தருணத்தில் கலைஞர் அவர்களை பேராசிரியர் சந்தித்து, “ஒரு செட் சலவைத் துணியை எனக்குத் தந்ததைத் தவிர வேறு எந்த செலவையும் இந்த வேலு ஏற்படுத்தவில்லை” என்று என்னைப் பற்றி கலைஞரிடம் கூறியிருக்கிறார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீகுக்கும், எனக்கும் நீண்ட நாள் உறவு இருந்து கொண்டே இருக்கிறது. நான் இந்தப் பேராசிரியருக்கு மட்டும் வேலை செய்யவில்லை. இவருக்கு முன்பு இருந்த அப்துல் சமது போன்ற தலைவர்களுக்கும் வேலை செய்திருக்கிறேன். 1977 குல் அப்பொழுது இருந்த ஒன்றுபட்ட வட ஆற்காடு மாவட்டத்தில், அப்துல் சமது வெற்றி பெறுவதற்கும் கடுமையாக உழைத்தவன்தான் இந்த தொண்டன் எ.வ. வேலு.

**முதல்வர் தளபதியையும் பேராசிரியரையும் பிரிக்கவே முடியாது!**

இதை நான் சொல்வதற்குக் காரணம், கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களையும், கலைஞரையும் பிரிக்க முடியாது. இந்திய யூனியன் முஸ்லிம் லீகையும் என்னையும் பிரிக்க முடியாது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தளபதி அவர்களையும், இந்தப் பேராசிரியரையும் எந்தச் சக்தியாலும் பிரிக்கவே முடியாது. அப்படியான உறவுமுறையோடும், சகோதரவாஞ்சையோடும் இந்த அரசியல் களத்தில் நாங்கள் தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

ஒன்றுபட்டிருந்த வட ஆற்காடு மாவட்டம் இன்று வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை என நான்கு மாவட்டங்களாகப் பிரித்து அமைக்கப்பட்டுவிட்டது. ஒன்றுபட்ட வட ஆற்காடு மாவட்டமாக இருந்தபோதே சட்டமன்ற உறுப்பினராக இருந்து மக்கள் பணியாற்றியவன் நான். எனவே இந்த ஒட்டுமொத்த மாவட்டத்திலும் எனக்குத் தெரியாதவர்கள் என்று யாரும் இருப்பதற்கு வாய்ப்பே இல்லை.

**தேர்தலின் சாதனையாளர்!**

மூன்று நாட்களுக்கு முன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலையெல்லாம் எடுத்துப் பார்த்தேன். வேலூர் தொகுதியில் திமுக பலமுறை வென்றிருக்கிறது. அதிமுக, காங்கிரஸ் கட்சிகளும் வெற்றி பெற்றிருக்கின்றன. இவ்வளவும் இருந்தாலும், வேலூர் நாடாளுமன்றத் தொகுதி என்று ஆன பிறகு அங்கு போட்டியிட்ட வேட்பாளர்களுள் மிக அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றவர் இன்றளவும் இந்தப் பேராசிரியர் ஒருவர் மட்டும்தான். இன்னொருவர் வரவில்லை. ஆக, தேர்தலின் சாதனையாளர் இந்தப் பேராசிரியர்தான்.

இங்கே எனது வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த பல சகோதரர்கள் வந்திருக்கிறீர்கள். நான் சொன்ன இந்தத் தகவல்களை நன்கு கருத்தில் கொண்டு, புரிந்து, அறிந்து, வருங்காலங்களிலும் அந்தக் சிறப்பான இடத்திற்காக நீங்கள் தேர்தல் பணியாற்றிட வேண்டுமென உங்களை வேண்டிக் கொள்ள விரும்புகிறேன்.

**முதல்வரின் புகழாரம்!**

தமிழ்நாட்டின் முதலமைச்சரான அன்பு அண்ணன் தளபதி அவர்களுக்கு இவரை மிகவும் பிடிக்கும். காரணம் வரலாற்றுச் சிறப்பிற்குரிய இந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பவராகவும், மிகப்பெரிய அரசியல் ஆளுமையாகவும் இவர் திகழ்கிறார் என்பதுதான். இன்று காலையில் பேராசிரியர் அவர்களுக்கு ‘தகைசால் தமிழர்’ விருதை தமிழ்நாடு அரசின் சார்பில் வழங்கிவிட்டு புறப்பட்டுச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் நானும் இணைந்து வாகனத்தில் சென்றேன். அப்பொழுது அவர் என்னிடம், “ஒரு பொருத்தமான செயலைச் செய்திருக்கின்றோம் என்ற மனநிறைவோடு இருக்கின்றேன். இந்தப் பேராசிரியரைப் பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், அவர் ரொம்ப ரொம்ப பெரிய்ய மனுஷன்யா என்றும் அவர் முறைப்படுத்தியெல்லாம் பேசாமல், மிகவும் இயல்பாக பேச்சுத் தமிழில் கூறினார்.

‘விளையும் பயிர் முளையிலேயே தெரியும்’ என்று ஒரு முதுமொழி உண்டு. இந்தப் பேராசிரியர் கல்லூரியில் படித்த காலகட்டத்திலேயே முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்று, தங்கப்பதக்கம் பெற்றவர். இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகத்தால் ‘தமிழ்மணி’ எனும் விருதைப் பெற்றவர். நமது தோழமைக் கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் ‘பிறை விருது’ பெற்றவர். அப்படிப்பட்ட இந்தப் பெருமகனாருக்குதான் அனைத்துக்கும் மேலாக இன்று தமிழ்நாடு அரசின் சார்பிலேயே தகைசால் தமிழர் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

ஆக, இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டதன் மூலம் இங்கு இருப்பவர்கள் மட்டுமின்றி, ஒட்டுமொத்த தமிழர்களும் இன்னும் ஒருபடி மேலே சொல்வதென்றால் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் மிகப்பெரிய மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

**ஒற்றுமையை ஓங்கி ஒலித்திடும் ஒளிக்கதிர்!**

இந்தப் பேராசிரியர் குரல் இல்லாதவர்களின் குரலாய் மக்கள் மன்றங்களில் ஒலித்தவர். சமூகநீதி, சமத்துவம், மதச்சார்பின்மை ஆகியவற்றைக் கட்டிக் காப்பதில் மிகவும் உறுதுணையாக இருப்பவர். அரசியல் வாழ்வில் நேர்மையின் முகம் என்றால் அது இவரது முகம்தான். மக்களின் உள்ளம் அறிந்து பேசும் மாமனிதர் இவர். பிரிவினை பேசும் காலகட்டங்களில் ஒற்றுமையை ஓங்கி ஒலித்திடும் ஒளிக்கதிர் இவர்.

இந்த நாட்டில் இன்று பல பேர் தலைமைப் பண்பு என்றால் என்ன என்றே தெரியாமல் தலைமைப் பொறுப்பில் சிக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், தெளிவான சிந்தனையும், தரமான பண்பும் கொண்ட மிகப்பெரிய தலைமை பண்பாளர் இவர். ஆன்மிகத்தின் அறிவுச்சுடர். எளிமையின் மறு உருவம். நற்குணங்களின் நாயகர். மார்க்கத்தின் தலைமை மாலுமி. உலகறிந்த உன்னதத் தலைவர். மனிதநேயத்தின் மகத்தான தலைவர்.

வாழும் வரலாற்றின் உன்னத நாயகரான இந்தப் பேராசிரியர் திருச்சிக்காரர். நானோ திருவண்ணாமலைக்காரன், இரண்டு ஊரின் பெயர்களிலும் திரு என்ற முன்னொட்டு இருக்கிறது. இந்த வகையிலும் எங்களுக்கு இடையில் நல்ல ஒற்றுமை இருக்கிறது. அப்படிப்பட்ட இந்த நல்ல மனிதர் பல்லாண்டு பலவாண்டு வாழ்வாங்கு வாழ தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பில் வாழ்த்துகிறேன். இவ்வாறு அமைச்சர் எ.வ. வேலு அவர்கள் பேசினார்.

நிகழ்ச்சியில் இறுதியாக தகைசால் தமிழர் முனீருல் மில்லத் பேராசிரியர் காதர் மொகிதீன் ஏற்புரை வழங்கினார்.